RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 294 | அக்டோபர்.25 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை உணவளிக்க ரூ.186 கோடி நிதி ஒதுக்கீடு



சென்னை, அக்.25-

சென்னை மாநகராட்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளை உணவளிக்க ரூ.186 கோடியை ஒதுக்கீடு செய்து, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில், தூய்மைப் பணியை தனியார் மயமாக்குவதை கண்டித்து, தூய்மைப் பணியாளர்கள் ரிப்பன் மாளிகை முன்பு கடந்த ஆகஸ்ட் மாதம் காலவரையற்ற போராட்டம் நடத்தி வந்தனர்.

இதை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக, ஆக.14ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில், தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்குவது உள்ளிட்ட 7 அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தனியார் நிறுவனம் மூலமாக தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு அளிப்பது தொடர்பாக சென்னை மாநகராட்சி நிர்வாகம் செயற்குறிப்பு ஒன்றை தயாரித்து, நிதி ஒதுக்கக் கோரி தமிழக அரசுக்கு அனுப்பி இருந்தது. அதில், "சென்னை மாநகராட்சியில் பல்வேறு பிரிவுகளில் நிரந்தரமாகவும், தனியார் மூலமும் 29,455 தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

அவர்களுக்கு 512 இடங்களில் 3 வேளை உணவு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு செயல்படுத்த ரூ.186 கோடி செலவாகும். அந்த தொகையை 6வது மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து வழங்க வேண்டும்" என கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாநகராட்சியின் செயற்குறிப்பை கவனமுடன் பரிசீலித்த அரசு, தூய்மைப்பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு 3 வேளை உணவு வழங்க ரூ.186 கோடி வழங்க அண்மையில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேலும், அனைத்து உணவுகளும் உணவு பாதுகாப்பு தரக்கட்டுப்பாடு நிறுவனம் சான்றளித்த சமையல் அறையில் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைளையும் அரசு விதித்துள்ளது.

## "நெல் கொள்முதல் செய்யவில்லை என விவசாயிகள் யாரும் புகார் கூறவில்லை" : உதயநிதி



தஞ்சாவூர்: அக்.25-

நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என விவசாயிகள் யாரும் புகார் தெரிவிக்கவில்லை என்றும், மத்திய அரசை காப்பாற்ற அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தான் பொய்யான தகவல்களை கூறி வருவதாகவும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை, தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பும் பணியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்றிரவு பார்வையிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை குடோனுக்கு எடுத்து செல்லாததால், அங்கு புதிய நெல் மூட்டைகளை வைக்க இடமில்லை என்று தவறான குற்றச்சாட்டை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

வழக்கமாக குறுவை சாகுபடி காலத்தில், அக். 1ம் தேதி தான் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். ஆனால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டில் இருந்து செப்.1ம் தேதியே நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

அதன்படி, நிகழாண்டு செப்.1ம் தேதி முதல் இதுவரை 1,825 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. சுமார் 10 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 8 லட்சம் டன் நெல் மூட்டைகள் குடோனுக்கு ஏற்கெனவே கொண்டு செல்லப்பட்டுள்ளன. மீதம் உள்ள நெல் மூட்டைகளை கொண்டு செல்லும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

நெல் கொள்முதல் நிலையங்கள் குறைவான அளவில் நெல் கொள்முதல் செய்வதாகவும் தவறான குற்றச்சாட்டை பழனிசாமி கூறியுள்ளார். ஒரத்தநாடு பகுதிகளில் தினமும் 3,000 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் யாரும், எந்த இடத்திலும் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என இதுவரை புகார் தெரிவிக்கவில்லை. பழனிசாமி மட்டும் தான் பொய் புகார்களை கூறி வருகிறார். அதேபோல நெல் மூட்டைகள் மழையில் நனைந்து, முளைத்து விட்டது என்ற ஒரு நாடகத்தை பழனிசாமி நடத்தியுள்ளார்.

அதில், அவரிடம் புகார் தெரிவித்த பெண்ணின் ஊருக்குச் சென்று அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, குத்தகை விவசாயம் செய்யும் அந்தப் பெண்ணின் வயலில் இதுவரை எந்த அறுவடையும் நடைபெறவில்லை என தெரியவந்துள்ளது. அறுவடையே நடைபெறாத வயலிலிருந்து, அவர் எப்படி நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்தார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

அதேபோல, செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்க மத்திய அரசு கடந்த ஜூலை மாதம் இறுதியில், ஒரு வழிகாட்டுதல் குழுவை தான் தமிழகத்துக்கு வழங்கியது. அதற்கு இதுவரை மத்திய அரசு ஒப்புதல் வழங்கவில்லை.

இதையெல்லாம் மறைத்து பாஜக அரசை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பழனிசாமி இந்த பொய்களை தெரிவித்து வருகிறார். அதை மக்களோ, விவசாயிகளோ நம்ப எந்த நேரத்திலும் தயாராக இல்லை. இவ்வாறு அவர் கூறினார். அப்போது, அமைச்சர்கள் அர.சக்கரபாணி, கோவி.செழியன், டிஆர்பி.ராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## முப்படைகளுக்கு ரூ.79,000 கோடியில் ராணுவ தளவாடம் கொள்முதல்: பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல்




புதுடெல்லி, அக்.25-

ரூ.79,000 கோடி மதிப்பில், முப்படைகளுக்கு தேவையான ராணுவ தளவாடங்கள் வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பின் ராணுவ தளவாட பொருட்கள் கொள்முதலுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் 5ம் தேதி ரூ.67,000 கோடியில் தள வாடங்கள் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் நவீன தளவாடப் பொருட்கள் தேவை என முப்படைகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதையடுத்து பாதுகாப்பு தளவாடப் பொருட்கள் கொள்முதல் கவுன்சில் கூட்டம், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் கடற்படைக்காக, கரையில் ராணுவ வீரர்கள், சரக்குகளை இறக்கும் வசதியுடன் கூடிய போர்க் கப்பல்கள், 30 எம்.எம் பீரங்கிகள், நவீன எடை குறைவான டார்பிடோக்கள், எலக்ட்ரோ ஆப்டிக்கல் கண்காணிப்பு கருவிகள், 76 எம்எம் பீரங்கிகளுக்கான ஸ்மார்ட் குண்டுகள் ஆகியவை வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தரைப்படை மற்றும் விமானப்படையுடன் இணைந்து பணியாற்றவும், அமைதிப்படை நடவடிக்கைகள், பேரிடர் காலத்தில் நிவாரண பணிகளை மேற்கொள்ளவும் கடற்படைக்கு எல்பிடி கப்பல்கள் உதவியாக இருக்கும். அதேபோல் டிஆர்டிஓ உள்நாட்டில் தயாரித்துள்ள ஏஎல்டபிள்யூடி டார்பிடோக்கள் மூலம் எதிரி நாட்டின் அனைத்து வகையான நீர்மூழ்கி கப்பல்களையும் தகர்க்க முடியும். 30 எம்எம் என்எஸ்ஜி பீரங்கிகள், கடல் கொள்ளையர்கள் மீது தாக்குதல் நடத்த கடற்படை மற்றும் கடலோர காவல் படைக்கு உதவியாக இருக்கும்.

தரைப்படைக்காக, எதிரி படைகளின் கவச வாகனங்களை தகர்க்கும் நாக் ஏவுகணைகள் மற்றும் எலக்ட்ரானிக் உளவு கருவிகள் மற்றும் கன ரக வாகனங்கள் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விமானப்படைக்காக தானியங்கி ஆயுதங்கள் உட்பட இதர தளவாடப் பொருட்கள் வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.79,000 கோடி.

## சென்னையில் மழைநீர் தேங்குவதை தடுக்க 1436 மோட்டார் பம்புகள், 215 நிவாரண மையங்கள் - தமிழக அரசு



சென்னை, அக்.25-

சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றுவதற்காக 1,436 மோட்டார் பம்புகளும், 100Hp திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகளும், டிராக்டர் மேல் பொருத்தப்பட்டுள்ள 500 மோட்டார் பம்புகளும் தயார் நிலையில் உள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக முதல்வர் ஸ்டாலின் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார்.

முதல்வர் ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், அமைச்சர் பெருமக்களும் மழைநீர் சூழும் பகுதிகளைப் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள். இந்த பருவமழைக் காலத்தில் 17.10.2025 அன்று காலை 8.30 மணிமுதல் 24.10.2025 காலை 8 மணிவரை சராசரியாக 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது. 23.10.2025 காலை 8.30 மணிமுதல் இன்று காலை 8 மணிவரை சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரைப் பொறுத்தவரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 23.10.2025 வரை 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. 150 எண்ணிக்கையில் 100Hp மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், பல்வகை பயன்பாட்டிற்கான 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினிஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

17.10.2025 முதல் 22.10.2025 வரை மழையின் காரணமாக விழுந்த 31 மரங்களும் அகற்றப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரிவித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழையால் பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும், சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23.10.2025 அன்று 3181 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 ஆண்டுகளில் சாலை அமைத்ததாக கணக்கு காட்டிய தமிழக அரசின் ரூ.78 ஆயிரம் கோடி நிதி எங்கே? அண்ணாமலை கேள்வி

சென்னை, அக்.25-

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சாலைகள் அமைத்ததாக கணக்கு காட்டிய ரூ.78 ஆயிரம் கோடி நிதி எங்கு சென்றது என முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக கர்நாடகா எல்லைப் பகுதியான ஈரோடு மாவட்டம் பர்கூர் மலையில் 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்குள்ள குட்டையூர், வேலாம்பட்டி, மட்டிமரத்தள்ளி ஆகிய மலை கிராமங்களுக்கு நேரடியாகச் செல்ல பாதை இல்லை. கர்நாடக, தமிழக வனப்பகுதிக்கு மத்தியில் உள்ள கர்கேகண்டி நீரோடை பள்ளம் வழியாக சுமார் 20 கி.மீ. பயணம் செய்தே இந்த கிராமங்களுக்குச் செல்ல முடியும். இந்நிலையில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்யும் கனமழை காரணமாக, கர்கேகண்டி நீரோடை பள்ளத்தில், காட்டாறு வெள்ளமாக ஓடுவதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, மக்கள் கிராமங்களுக்கு செல்ல முடியாமல் முடங்கியுள்ளனர். இங்கு சாலைவசதி கோரி நீண்டநாட்களாக கோரிக்கை வைத்தும் அரசு நிர்வாகம் கண்டுகொள்ளவில்லை.

திமுக ஆட்சிக்கு வந்து கடந்த 5 ஆண்டுகளில் சாலைகள், பாலங்கள் அமைக்க சுமார் ரூ.78 ஆயிரம் கோடி செலவிட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கை கூறுகிறது. அந்த நிதி எங்கு சென்றது என்பதற்கு, முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். சாலை வசதிகள் இல்லாத மலைக் கிராமங்களுக்கு போர்க்கால அடிப்படையில் உடனடியாக சாலைகள், உயர்மட்டப் பாலங்கள் அமைத்து தரவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மது விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை: அமைச்சர் முத்துசாமி உறுதி

ஈரோடு, அக்.25-

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் முத்துசாமி ஈரோட்டில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் மது விற்பனையை அதிகரிக்க அரசு எந்த கூடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆண்டுதோறும் மது விற்பனை அதிகரிப்பது வழக்கமான ஒன்று. இதற்காக அரசு தனி முயற்சி எடுப்பதில்லை. மாறாக, மதுக் கடைகளை படிப்படியாக மூடும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

மது பாட்டிலுக்காக வாங்கப்படும் ரூ.10 அரசின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. அந்தப் பணத்தை தவறாகப் பயன்படுத்த முடியாது. நீதிமன்ற உத்தரவுப்படி தான் மது பாட்டில்களுக்கு வைப்புத்தொகை பெறப்படுகிறது. ஆனால், கூடுதலாக 10 ரூபாய் பெறப்படுவதாக தவறாக சித்தரிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.



# வேலூரில், வேளாண் உட்கட்டமைப்பு குறித்த கருத்தரங்கம்

வேலூர், அக்.25-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, டார்லிங் ரெசிடென்சி கூட்டரங்கில், வேளாண் உட்கட்டமைப்பு குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி, கலந்துகொண்டு தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் இணை இயக்குநர் (வேளாண்மை) ஸ்டீபன் ஜெயக்குமார், வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் சு.இராமதாஸ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ரமணி, வேளாண் பொறியியல் செயற் பொறியாளர் ராஜேஷ், வேளாண் வணி கம் மற்றும் விற்பனை துணை இயக்குநர் கலைச்செல்வி, நபார்டு உதவி பொது மேலாளர் ஸ்ரீபாரதிராஜன். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தேன்மொழி, பொறியாளர் பாஸ்கரன், உள்ளிட்ட வங்கி அலுவலர்கள் விவசாய பெருமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# தேவகோட்டையில் 80-ம் ஆண்டு கந்தர் சஷ்டி விழா தொடக்கம்

தேவகோட்டை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர சிவன் கோயிலில் 80ம் ஆண்டு கந்தர் சஷ்டி விழா கோவில் முன்பாக அமைக்கப்பட்ட மிக பிரமாண்டமான பந்தலில் நடைபெற்று வருகிறது. கந்த சஷ்டி விழா குழுவிற்கு தலைவர் மற்றும் பதவிகளுக்கு தேர்தல் நடைபெறும் ஆனால் இந்த80 ஆம் ஆண்டு அனைவரும் ஒரு மனதாக தெய்வத்திரு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி லெட்சுமணன் அவர்களின் புதல்வர் அருணாச்சலம் இக் குழுவின் தலைவராக பதவி வகித்தார் . அவர் தலைமை உரையாற்றினார். அதன் முன்பாக மேடையில் பள்ளிக் குழந்தைகள் முருகன் படத்திற்கு மாலை தூவி இறைவணக்கம் பாடினார்கள். செயலாளர் மீனாட்சி சுந்தரம் வரவேற்றார். இணைச் செயலாளர் சுவாமிநாதன் அறிக்கை வாசித்தார். 8 நாட்கள் நடைபெறும் விழாவில் ஒவ்வொரு நாளும் அறிவியல், ஆன்மிகம், மருத்துவம், ஆராய்ச்சி, சங்கீதாம் போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

மத்திய அரசினுடைய கப்பல் மற்றும் நீர் வழித்துறையில் செயலராகப் பணியாற்றும் தேவகோட்டையைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி ஆர் லட்சுமணன் தொடக்க உரையாற்றினார். அவர் தொடக்க உரையாற்றுகையில் முதலில் பீகாரில் வேலை பார்த்ததாகவும் கல்வித்துறையில் மதிய உணவு சுமார் 20% பள்ளியில் மட்டுமே இருந்தது என்றும் அதை அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தியதாகவும் இதே போல் அங்கு 40 சதவீதம் இல்லங்களில் மின்சாரம் இணைப்பு இருந்தது என்றும் அதனை முயற்சி செய்து 100% மாற்றியதாகவும் அவர் ஐஏஎஸ் தேர்வு எழுதியது பற்றிக்கூறி இப்பகுதி இளைஞர்கள் அதிக அளவில் இது போன்ற அரசு பணிகளுக்கு வர வேண்டும் என்றும் கூறினார்.

கோவிலூர் ஆதீனம் நாராயண சுவாமிகள் ஆசியுரை வழங்கி பேசுகையில் கோவிலூர் மடாலயத்தில் புத்தகங்களை மின்னாக்கம் செய்து வருவது பற்றி விளக்கமாக உரையாற்றினார் தற்பொழுது புதையல் என்ற ஒரு மின் பத்திரிகையை தொடங்கி இருப்பதாக கூறினார். அதனைத் தொடர்ந்து மருத்துவர் பேராசிரியர் மோகன் வாழ்த்துரை வழங்கினர் பேசுட முருகனைப் பற்றிய சில தகவல்களையும், வயதான காலத்தில் உடல் நலத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூறினார் அதனைத் தொடர்ந்து கந்த சஷ்டி விழாக்கழகம் நடத்திய அபிராமி அந்தாதி ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



# பகுடி கத்திலி குலத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் விழா

தேனி, அக்.25-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் 15 வது வார்டு மதுரை வீரன் தெருவில் அமைந்திருக்கும் பகுடி கத்திலி குலத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் 24.10 .2025 வெள்ளிக்கிழமை காலை 9.25 மணிக்குமேல் 10.00 மணிக்குள் வெகு விமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தில் காலை முதல் அக்னி ஆராதனம், கோ பூஜை, 2ம் கால சக்தியாகாம், ஆண்டாள் நாச்சியாருக்கு பூ சுக்தயாகம், யாத்திரை தானம் என பல பூஜைகள் நடைபெற்றன அதனைத் தொடர்ந்து ஆண்டாள் நாச்சியார் கோபுர கலசத்திற்கும் மூலஸ்தான ஆண்டாள் நாச்சியாருக்கும் பரிவார தெய்வமாகிய விநாயகர் சுவாமிக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்விழாவின் நிர்வாக குழு தலைவர் பாண்டி (எ)பாஸ்கரன், கௌரவத் தலைவர் மாரியப்பன், செயலாளர் பெருமாள், துணைச் செயலாளர் பிரபு, பொருளாளர் அழகர்சாமி மற்றும் விழா கமிட்டியாளர்கள் முத்துக்குமார், சண்முகம், விவேக்கண்ணன், பொன்ராஜ், புவனேஷ், பெருமாள் சாமி. இவ்விழாவிற்கு வருகை புரிந்தத தங்க தமிழ்ச்செல்வன் M.A., M.P, தேனி வடக்கு மாவட்ட திமுக கழகச் செயலாளர் தலைமையிலும் மற்றும் ராஜராஜேஸ்வரி சங்கர் போடி நகர் மன்ற தலைவர், புருஷோத்தமன் போடி நகர் கழகச் செயலாளர், ராஜ ரமேஷ் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர், சங்கர் தலைமை செயற்குழு உறுப்பினர், ராஜா 15 வது வார்டு நகர மன்ற உறுப்பினர், மகேந்திரன் எஸ்.ஏ.டி. பில்டர்ஸ், மணிவண்ணன் சிகரம் பில்டர்ஸ் இவர்களது முன்னிலையிலும் மற்றும் பகுடி கத்திலி குலத்திற்கு பாத்தியப்பட்ட குடும்பத்தார்களும் பெரியோர்களும் பொதுமக்களும் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருவருள் பெற்றுச் சென்றனர். அதனைத் தொடர்ந்து பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ காளியம்மன் கோவில் மண்டபத்தில் அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் கந்த சஷ்டி முன்னிட்டு மூன்றாம் நாள் இன்று முருகனுக்கு ராஜாங்கம் அலங்காரம் சிறப்பு அபிஷேகம்



தேவகோட்டை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம்நகரில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் உள்ளது. மூன்றாம் நாள் இன்று கந்த சஷ்டி முன்னிட்டு சிறப்பு அபிஷேக் ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக விநாயகருக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். பின்னர் ஸ்ரீ பாலமுருகனுக்கு மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர்திருநீர், 11வகையான அபிஷேக ங்கள் நடைபெற்றது. அபிஷேகங்களுக்கு பின்னர் முருகனுக்கு சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். பக்தர்கள் பக்தர்கள் சஷ்டி கவசம் பாடினர். திரளான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று சாமி தரிசனம் செய்தனர். திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள அ. திருவுடையார்புரத்தைச் சார்ந்த பட்டியல் வகுப்பைச் சேர்ந்த முனியாண்டி மகன் வீரமணி(35) இவர் தனியார் பைக் கம்பெனியில் டூவிலர் மெக்கானிக் வேலைசெய்து வருகிறார். கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு அதே ஊரைச் சேர்ந்த மாற்றுசமூகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீரமணியை பைக் கம்பெனியில் மெக்கானிக் வேலைசெய்து கொண்டிருந்தபோது தான் மறைத்து வைத்திருந்த வாளால் வெட்டி விட்டு தப்பி ஓடிவிட்டார்.அருகில் இருந்தவர்கள் காயம்பட்ட வீரமணி 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் மூன்று நாள் ஆகியும் இதுவரை காவல் துறையின் நடவடிக்கை எடுக்க வில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது காவல்துறையினர் மெத்தன போக்கைக் கண்டித்து சமூகம் ஆர்வலர்கள் , மற்றும் சமூக அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக கூறப்படுகிறது.



■ 23.10.2025 தேதி திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி கபடி அணிக்கு திருப்பூர் மாவட்ட காவல் ஆய்வாளர் உயர்திரு முத்துக்குமார் அவர்கள் தனது சொந்த செலவில் கபடி சீருடை அளித்து மாவட்ட கபடி அளவிலான போட்டியில் பங்குபெறும் கபடி அணியை வாழ்த்துக்கள் தெரிவித்தார்.




# கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 70,83 ஆகிய வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

கோவை, அக்.25-

கோவை மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 70 மற்றும் 83 வார்டுக்குட்பட்ட பகுதியில் “எல்லோருக்கும் எல் லாம்“ திட்டத்தின் கீழ், “உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் பூமார்க்கெட் ஐ எம்ஏ கூட்டங்கில் நடை பெற்றது...

அரசுத்துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்கள் பொதுமக்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் வகையில்

தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது....

13 அரசுத் துறைகள் சார்பில் 43க்கும் மேற்பட்ட அரசு சேவைகள் ஒரே கூரையில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட கோப்புகள் முகாம் நடைபெற்றது...

சிறப்பு முகாமினை மத்திய மண்டல தலைவர் மீனா லோகு , 70வது வார்டு கவுன்சிலர் சர்மிளா சுரேஷ் நாராயணன், 83 வந்து வார்டு கவுன்சிலர் சுமா விஜயகுமார் வட்ட குழி செயலாளர்கள் சுரேஷ் நாராயணன், விஜயகுமார், மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தாசில்தார் உட்பட பலர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்...

முகாமினை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் செந்தமிழ் செல்வன் மாணவரணி மாநில செயலாளர் இராஜிவ்காந்தி , தெற்கு தொகுதி பார்வையாளர் டாக்டர் மகேந்திரன் ஆகியோர் சிறப்பு முகாமில் நேரில் பார்வையிட்டனர்...

மேலும் சொத்துவரி பெயர்மாற்றம் மின்சார பெயர் மாற்றம் கலைஞர் காப்பீடு அட்டை என முகாமில் தீர்வு காணப்பட்டு உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கினார்கள்...

மேலும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனடியாக செயல்படுத்துவதாக கூறினர்...

இது குறித்து மாநகர் மாவட்ட பொறுப்பாளர் செந்தமிழ் செல்வன் கூறுகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் ஒரே கூரையின் கீழ் 13 அரசு துறைகளைச் சார்ந்த சேவைகள் வழங்கி வருவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது திட்டத்தை அறி வித்த தமிழக முதல்வருக்கு பொதுமக்களின் சார்பாகவும் கழகத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம் என்று கூறினார்...

இம்முகாமில் சின்ன எல்லை சந்தில் வசிக்கும் மூளை வளர்ச்சி குன்றிய 73வயது ரஞ்சனி என்ற மூதாட்டிக்கு தற்போது வரையிலும் ஆதார் அட்டை வழங்கப்படவில்லை எனவே இதை அறிந்து கவுன்சிலர் சர்மிளா சுரேஷ் நாராயணன் பரிந்துரையின் பேரில் ஆதார் அட்டை வழங்குவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டு தெற்கு தாசில்தாரிடம் வழங்கப்பட்டது.தாசில்தார் கூறுகையில் அந்த பாட்டியின் இல்லத்திற்கு நேரடியாக சென்று பரிசீலனை செய்து ஆதார் அட்டை வழங்குவதாக தெரிவித்தார்...

முகாமில் அரசு அதிகாரிகள் மாநகராட்சி அதிகாரிகள் பகுதி கழக செயலாளர்கள் கண்ணன், பக்ருதீன் மற்றும் இளைஞரணி துணை அமைப்பாளர் பாலாஜி , கழக நிர்வாகிகள் பத்மா மகாலட்சுமி அருணாச்சலம் ரமணி கவிதா நாகமாணிக்கம் ரூபன் முருகேசன், ஸ்ரீ கீதா வெங்கடேஷ் வில்லவன் கோதை காளிதாஸ் சண்முகம் ரங்கநாதன் குருசாமி ரவிச்சந்திரன் மார்க்கெட் ரவிமற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்ட னர்....

# பழனியில் பெட்ரோல் குண்டு வீசி தப்பி ஓடிய குற்ற சம்பவ பதிவேட்டில் உள்ள மதுரை சேர்ந்த மூன்று இளைஞர்கள் கைது

திண்டுக்கல், அக்.25-

திண்டுக்கல், பழனி, சாமிநாதபுரம் ஜிவிஜி நகர் பகுதியில் மூன்று இளைஞர்கள் கஞ்சா போதையில் இளைஞர்கள் அவர்களுக்குள்ளே சண்டை.போட்டுள்ளனர். இதுகுறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்த பேப்பர் மில் நடத்தி வரும் உலகநாதன் என்பவர் உறவினர் ராமாத்தாள் வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்த ஆம்னி வேன் கண்ணாடியை உடைத்து. ராமாத்தாள் வீட்டின் முன்பு. பட்டப் பகலில் கஞ்சா போதையில் தகராறு செய்தவர்களை குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்த குடும்பத்தினர் வீட்டின் முன்பு பெட்ரோல் குண்டு வீசியும், கத்தியை வைத்து அலப்பறை செய்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து சாமிநாதபுரம் காவல் துறை விரைந்து அவர்களை பிடிக்க வரும்பொழுது தப்பி ஓடினர். மற்றும் பல மாவட்டங்களில். குற்ற சம்பவ பதிவேட்டில் உள்ள. மதுரை சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த கௌதம் என்ற தண்ணி பழம். அவனியாபுரத்தைச் சேர்ந்த முத்துப்பாண்டி மகன் முத்துக்குமார். ஜிவிஜி நகரைச் சேர்ந்த சுள்ளான் என்ற ஹரிமணி இந்த மூன்று நபர்களைபழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் தலைமையிலான. சாமிநாதபுரம் சார்பு ஆய்வாளர் முரளி சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ். காவலர்கள் குபேந்திரன். மாரிமுத்து. மூன்று தனி படை பிரிவுகள் மதுரைக்கு சென்று குற்றவாளிகளை கைது செய்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர்




# தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டல அலுவலகத்தில் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

பம்மல், அக்.25-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான பகுதி சபா கூட்டம் நடத்துவது குறித்து தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத்தலைவர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளர் சொர்ணலதா அவர்கள் முன்னிலையில் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பருவ மழை மண்டல பொறுப்பாளர் செந்தில்குமார், உதவி செயற் பொறியாளர் இ.சத்தியசீலன், சுகாதார அலுவலர் மாரிமுத்து, தாம்பரம் மாநகராட்சி சுகாதார குழு தலைவர் இரா.நரேஷ் கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், கல்யாணி டில்லி, மு.இன்பசேகர், ரம்யா சத்யபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன், மற்றும் தாம்பர மாநகராட்சி மண்டல அதிகாரிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்



# பழனியில் மீன் வளத்துறை அதிகாரிகளை கண்டித்து மீனவர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், அக்.25-
திண்டுக்கல் மாவட்டம் பழனி பகுதியில் 40க்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. இவற்றில் மீன்குஞ்சுகள் வளர்ப்பு செய்து மீன்பிடித்து விற்பனை செய்ய மீன்வளத்துறை சார்பில் ஏலம் விடப்படுவது வழக்கம். குளத்தில் உள்ள மீன்களை பிடிக்கும் மீன்பிடி தொழிலாளர்களுக்கு பங்குத் தொகையும் பிரித்து அளிக்கப்படுகிறது. இந்நிலையில் வெளிப்படையாக ஏலம் விடப்பட்டு வந்த நிலையில் இடெ ண்டர் மூலம் ஏலம் விட முடிவு செய்து மீன்வளத்துறை நடவடிக்கை எடுத்துள்ளனர். இடென்டர் ஏலம் குறித்து மீனவர்களுக்கு முறையான அறிவிப்பு இல்லாமல் ஏலம் விடுவதாகவும், மேலும் குளங்களை ஏலம் எடுப்பவர்கள் மீன்பிடி தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய பங்குத் தொகையையும் முறையாக கொடுக்காமல் இருப்பதாகவும் புகார் தெரிவித்தனர். மேலும் இடெண்டர் முறை குறித்தும் பங்குத் தொகை குறித்தும் உயர்நீதிமன்றம் கூறிய தீர்ப்பின் படி நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது . மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களின் சிரமம் குறித்து எடுத்து சொல்லியும் மீன்வளத்துறை அதிகாரிகள் அலட்சியத்தோடு செயல்படுவதாக கண்டனம் தெரிவித்தனர். எனவே உடனடியாக தமிழக அரசு மீன்வளத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான மீன் வர்கள் குடும்பத் தினருடன் கலந்து கொண்டனர்.



■ கோயம்புத்தூர் மாவட்டம் இருகூர் பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த சிறு புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்




■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (24.10.2025) நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப. அவர்கள், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ.விஜய் வசந்த் அவர்கள் ஆகியோர் துறைசார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), முனைவர் தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப. உள்ளார்கள்





# சிவகங்கை மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள்



சிவகங்கை, அக்.25-
சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் துவங்கப்பட்டன. போட்டிகள் மருது பாண்டியர் நகர் அரசு மேல்நிலை ப்பள்ளி புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித மைக்கேல் பதின்ம மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

பசுமையும் பாரம்பரியமும் என்ற மையக்கருத்தின் அடிப்படையில் அரசு பள்ளி மாணவர்களுக்கு தனியாகவும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு தனியாகவும் நடத்தப்படுகிறது. பள்ளி அளவில் குறுவளமைய அளவில் மற்றும் ஒன்றிய அளவில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒன்றிய அளவில் முதல் இடம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 3100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டியினை சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மாரிமுத்து துவங்கி வைத்தார். மேலும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கநிலை) ராஜேந்திரன் மற்றும் திரு செந்தில்குமரன், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திரு வடிவேலு, ஒருங்கிணைந்த பள்ளி கல்வியின் உதவி திட்ட அலுவலர் திரு பீட்டர் லெமாயு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நேற்று 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன. இன்று 25.10.2025 9, 10 ஆம் வகுப்பு மாணவர் களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன. 28.10.2025 அன்று 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன.

29.10.2025 அன்று 1 முதல் 5 வகுப்பு மாணவர் களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன. இப் போட்டிகள் கவின்கலை இசைக்கருவி இசை நடனம் மற்றும் நாடகம் எனும் உட்பிரிவுகளைக் கொண்டு மொத்தமாக 100 போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளை அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் வட்டார கல்வி அலுவலர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்த பள்ளி கல்வியின் இதர பணியாளர்கள் என அனைவரும் இணைந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று முதல் பரிசு பெறும் மாணவ மாணவிகள் 24.11.2025 முதல் 28.11.2025 வரை நடைபெற உள்ள மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் கலந்து கொள்வார்கள். மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில் தங்களின் திறமையை நிரூபித்து அதிக அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு கலையரசன் மற்றும் கலையரசி பட்டம் வழங்கப்படும்.

இப்போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ செய்திருந்தார்.




# மதுபானக் கடைகள் அடைப்பு

மதுரை, அக்.25-
27.10.2025 அன்று சிவகங்கை மருதுபாண்டியர்கள் நினைவு தினத்தை முன்னிட்டும், 29.10.2025 மற்றும் 30.10.2025 ஆகிய நாட்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகனாரின் 118 வது ஜெயந்தி மற்றும் 63 வது குருபூஜை விழாவை முன்னிட்டும், மதுரை மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினை நிலை நாட்டும் பொருட்டு 27.10.2025 (மாலை 7 மணி வரை மற்றும் 29.10.2025, 30.10.2025 ஆகிய தினங்களில் மட்டும்), FL1/FL2/FL3/FL3A/FL3AA/FL4 மற்றும் FL11 உரிமம் பெற்றுள்ள அனைத்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், மனமகிழ் மன்றங்கள், தங்கும் விடுதியுடன் கூடிய மதுபானக் கூடங்கள், படை வீரர்கள் கேண்டீன் மற்றும் அயல்நாட்டு மதுபான சில்லரை விற்பனை கடைகள் மூடப்பட்டு இருக்கும். மேற்படி தினங்களில் மது விற்பனை தொடர்பான விதிமீறல்கள் ஏதும் நடைபெறாமல் கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தினங்களில் மதுபான சில்லரை விற்பனை எதுவும் நடைபெறாது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



# எஸ்.புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட முசுண்டபட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது

சிவகங்கை, அக்.25-
சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முசுண்டபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.





# இந்திய திபெத் எல்லை காவல் படையின் 64 வது தொடக்க தினம்



சிவகங்கை, அக்.25-
சிவகங்கை மாவட்டம் இந்திய திபெத் எல்லை காவல் படையின் 64 வது தொடக்க தினத்தை முன்னிட்டு நேற்று 2410 25 அன்று சிவகங்கை இழுப்பாய்குடியில் உள்ள துணை இராணுவ பயிற்சி மைய வளாகத்தில் திரு.டி. ஜஸ்டின் ராபர்ட் காவல் துணை தலைவர் தலைமையில் மிகுந்த ஆர்வத்துடனும் நெகிழ்ச்சியுடனும் கொண்டாடினார். இந்த நிகழ்வில் துணை இராணுவ பயிற்சி மைய காவல் துணை தலைவர் அவர்கள், பிரமாண்ட அணிவகுப்பில் மரியாதை செலுத்தி ,புதிதாக பணியமர்த்தப்பட்ட வீரர்களுக்கு, நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதில் இந்திய திபெத் எல்லை காவல் படையின் சாதனைகள் குறித்து விளக்கினார்.

இந்த பயிற்சி வளாகம் 2011 முதல் படையில் புதிதாகச் சேர்பவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.இந்த பயிற்சி மையம் வளாகத்திலும் அருகிலுள்ள கிராமங்களிலும் வீரர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளிடையே மரம் நடுதல், தூய்மை மற்றும் யோகா மற்றும் உடல் பயிற்சி பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது.இந்த நிகழ்வில், சிவகங்கை மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.ரமேஷ் கண்ணன் அவர்கள் ஃபிட் இந்தியா பிரச்சாரத்தில் வெற்றி பெற்ற குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

# தலைமை பொதுக்குழு உறுப்பினர்,மேடவாக்கம்., ப. ரவி இயற்கை எய்தியதையொட்டி முதலமைச்சர்., மு. க .ஸ்டாலின் அவரது இல்லத்தில் அஞ்சலி



சென்னை, அக்.25-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேட வாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், முன்னாள் ஒன்றிய செயலாளர், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான., மேடவாக்கம் , ப.ரவி உடல்நல குறைவால் இயற்கை எய்தியதையொட்டி (அக்: 23) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான, துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், கே. என் .நேரு., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்., மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் : எஸ் .ஜெகத்ரட்சகன், தமிழச்சி தங்கபாண்டியன். சட்டமன்ற உறுப்பினர்கள் : க.பொன்முடி, எஸ் .அரவிந்த் ரமேஷ், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர்,. காமராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.



# தேவகோட்டை நகராட்சியில் கால்வாய்கள் தூர் வாரும் பணியை நகர்மன்ற தலைவர் சுந்தரலிங்கம் ஆய்வு மேற்கொண்டார்

தேவகோட்டை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சி 27 வார்டுகளை கொண்டு உள்ளது. அஇஅதிமுக நகர்மன்ற தலைவர் சுந்தரலிங்கம் பதவி ஏற்ற நாள் முதல் நகரில் மக்களின் அன்றாட பணிகளை செய்து வருகிறார். தற்போது வட கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கையாக நடவடிக்கையாக அனைத்து கழிவு நீர் கால்வாய்களையும் தூர்வாரும் பணிகளை நகர மன்ற தலைவர் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

நேற்று பெய்த கன மழையால் தியாகிகள் பூங்கா, பேருந்து நிலையம், வாடியார் வீதி போன்ற பகுதியில் மழைநீர் பெருக்கெடுத்து தலைமை தபால் நிலையம் முன்பு சாலையில் ஒன்றிணைந்தால் 2 அடி தண்ணீர் தேங்கி சென்றது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமம் அடைந்தனர். இதனை அறிந்த நகர் தலைவர் சுந்தரலிங்கம் 20 க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மூலம் இன்று காலை திருப்பத்தூர் சாலையில் உள்ள தலைமை தபால் நிலையம் அருகே தூர்வாரும் பணி மேற்கொண்டார். பொறியாளர் மீராஅலி, சுகாதார ஆய்வாளர் பாண்டிசெல்வம் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்..



# பருவ மழையில் வீடு இடிந்த இலவம்பாடி கிராம திமுக நிர்வாகிக்கு, கருணை உள்ளம் கொண்ட அணைக்கட்டு எம்.எல்.ஏ. நந்தகுமார் நலதிட்ட உதவி வழங்கினார்

வேலூர், அக்.25-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, இலவம்பாடி ஊராட்சி, இலவம்பாடி கிராமம் கருநீகர் தெருவில் வசிக்கும் திமுக நிர்வாகி பழனி என்பவரின் வீடு வடகிழக்கு பருவ தொடர் மழையால் சேதம் அடைந்ததை தொடர்ந்து தகவல் அறிந்த சமூக உணர்வு மிக. அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினரும், திமுக மாவட்ட செயலாளருமான ஏ.பி.நந்தகுமார் விரைந்து சென்று நேரில் பார்வையிட்டு, கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் மாடி வீடு கட்ட உடனடியாக பரிந்துரைக்கப்படும் என ஆறுதல் தெரிவித்து, அவரது சொந்த செலவில் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய், தக்காளி வெங்காயம் காய்கறிகள் உள்ளிட்ட தொகுப்பு வழங்கினார். இந்நிகழ்வின் போது மாவட்ட ஊராட்சி திட்ட குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளரும், ஒன்றிய குழு துணை தலைவர் சித்ரா குமாரபாண்டியன், ஒன்றிய குழு உறுப்பினர் பகவதி பிரகாசம், கே வி குப்பம் ஒன்றிய திமுக பொருளாளர் சிட்டிபாபு, வள்ளி திருமண மண்டப உரிமையாளரும், மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளருமான டி.எம். குமார், இலவம்பாடி கிராம திமுக தலைவர்கள் யுவராஜ், வெங்கடேசன், சத்யா மோகன் பத்திரப்பதிவு எழுத்தாளரும், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளருமான மோகன், குடிசை குணசேகரன் மற்றும் திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சிவகங்கை கோட்டம் சார்பில் முக்கிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது

சிவகங்கை, அக்.25-

சிவகங்கை மின்சார வாரியம் சிவகங்கை கோட்டம் சார்பில் மழைக் காலங்களில் எவ்வாறு மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன அதில் மின்கம்பிகள் அறந்து கிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள். பில்லர்.எக்ஸ் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கவும்.

சாலைகளிலும் தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின்சாதனங்களுக்கு அருகே தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் நடப் பதோ, ஓடுவதோ, விளையாடுவதோ மற்றும் வாகனத்தில் செல்வதோ தவிர்க்க வேண்டும்.

தாழ்வாக தொங்கிக் கொண்டிருக்கும் மின்சார ஒயர்கள் அருகில் செல்வதையும். தொடுவதையும் தவிர்க்கவேண்டும்.

மின்சார வாரியத்தைச் சாராத நபர்கள் யாரும் மின்கம்பத்திலோ, மின்மாற்றியிலோ ஏறி பணிகள் செய்யக்கூடாது. இது மின் விபத்து ஏற்படும் அபாயத்தை மேலும் அதிகரிக்கும்.

வீடு கட்டும் போது மின் கம்பத்தின் அருகில் போதிய இடைவெளி விட்டு கட்டிட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

டிராக்டர், லாரி போன்ற வாகனங்களில் கரும்பு போன்ற பொருட்களை ஏற்றி செல்லும் வழியில் தாழ்வான மின்கம்பி இருந்தால். முன்கூட்டியே மின்வாரியத்துக்கு தகவல் தெரிவித்தால் அவை சீர் செய்யப்படும்.

வீடுகள், கடைகள், பள்ளிகளில் மின் கசிவை தவிர்க்க உயிர் காக்கும் கருவியான ELCB அல்லது RCCB போன்ற துண்டிப்பான்கள் பொருத் தப்பட வேண்டும்.

மேலும் மாடு, ஆடு போன்ற கால்நடைகளை மின் பாதையின் கீழ் அல்லது ஸ்டே கம்பி அருகில் கட்டக்கூடாது.

ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின்சார சாதனங்களை இயக்க முயற்சி வேண்டாம்.

வீட்டில் மின் சுவிட்சுகளை ஆன்செய்யும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

வீட்டின் உள்புறசுவர் ஈரமாக இருந்தால் மின்சார சுவிட்சுகள் எதையும் இயக்ககூடாது.வீடுகள் மற்றும் கட்டிடங்களில் உள்ள ஈரப்பதமான சுவர்களில் கை வைப்பதை தவிர்க்கவேண்டும்.

நீரில் நனைந்த இல்லது ஈரப்பதமான பேன். லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்கவேண்டாம்.

மின்சார மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பகுதி ஈரமாக இருந்தால் உபயோகிக்க கூடாது.

வீட்டில் மின்சாரம் இல்லையென்றால் அருகில் இருந்து தாங்களாகவே ஒயர் மூலம் மின்சாரம் எடுக்கவேண்டாம்.

விவசாயிகள் தாங்கள் நிலங்களில் மின்சார வேலி அமைப்பது சட்டப்படி குற்றமாகும். இது உயிரிழப்புக்கு வழிவகுக்கும். மின்வேலி அமைப்பது கண்டறியப்பட்டால் காவல்துறையில் வழக்குபதிவு செய்யப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த சில நாட்களாக பருவமழை பெய்து வருவதால், மின் பாதைகளில் பல இடங்களில் கம்பிகள் அறுந்து கிடக்கும் அபாயம் உள்ளது. இதனால் மக்கள் மின் கம்பி அறுந்து கிடந்தால் அதை தொடாமலும், அருகில் செல்லாமலும் இருப்பதோடு, பொதுமக்கள் உடனடியாக அருகில் உள்ள மின் வாரிய அலுவலகத்துக்கு கீழ்க்கண்ட தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு சிவகங்கை உபகோட்டம் உதவிப்பொறியாளர்கள் எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

நகர் சிவகங்கை
9445853076
ஊரகம் சிவகங்கை
9445853077
மதகுபட்டி பிரிவு
9445853073
மலம்பட்டி பிரிவு
9445853075
உதவி செயற் பொறியாளர் சிவகங்கை
9445853074
பிரிவு அலுவலகங்கள்
உபகோட்டம் காளையார்கோவில் உதவிப்பொறியாளர்கள்
காளையார்கோவில்
9445853079
நாட்டரசன்கோட்டை
9445853081
மறவமங்களம்
9445853082
உதவி செயற் பொறியாளர் காளையார்கோவில்
9445853078
சிவகங்கை கோட்டம் செயற்பொறியாளர்
9445853080

மின்னகம் மின் நுகர்வோர் சேவை மையம்: 9498794987 தொடர்பு கொள்ளவும்

எனவே பொதுமக்கள் மேற்கூறிய பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடித்து, மின் வாரியத்துக்கு ஒத்துழைப்பு அளித்து மின்விபத்துகளை தவிர்க்குமாறு சிவகங்கை சிவகங்கை மின்சார வாரியம் சிவகங்கை கோட்டம் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு வினாடி வினாப் போட்டி நடைபெற்றது

சிவகங்கை, அக்.25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடிதமிழக அரசின் உயர் கல்வித் துறை மற்றும் கல்லூரிக்கல்வி இயக்குநரகத்தின் ஆணைக்கிணங்க போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்கும் விதமாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கத்தோடு வினாடி வினாப் போட்டி நடைபெற்றது. கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் குழுவின் சார்பாக நடத்தப்பட்ட இந்த வினாடி வினாப் போட்டியினை கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து துவக்கி வைத்தார். வினாடி வினாப் போட்டியின் நடுவர்களாக வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் குணசேகரன் மற்றும் இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் கருணாகரன் ஆகியோர் செயல்பட்டனர். இதில் ஏராளமான மாணவ மாணவியர் பங்கேற்றனர்.

இப் போட்டிக்கான ஏற்பாடுகளை அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் செய்திருந்தார்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் பரமக்குடி இளையான்குடி செல்லும் சாலையில் திருவுடையார்புரம் முன்பு உள்ள அக்பர் அம்மா பீரம்மாள் தர்ஹா முன்பு உள்ள வேப்ப மரம் முன்பு காவிரி கூட்டு குடிநீர் குழாய் உடைந்து பல மாதமாக ஒடிக்கொண்டு உள்ளது பரமக்குடிக்கு போகும் குழாயில் தண்ணீர் செல்லும்போது தண்ணீர் வீணாகி சாலை மற்றும் வயலில் செல்கிறது இதை உடன் சரி செய்ய தாங்கள் நடவடிக்கை எடுக்கும் மாறு பொதுமக்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் கிராம மக்கள் சார்பாகவும் வேண்டுகின்றோம் குடி தண்ணீர் பல ஆயிரம் லிட்டர் தினசரி ஒடிக்கொண்டு உள்ளது நடவடிக்கை எடுத்து சரி செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம் சமூக நல ஆர்வலர் இளையான்குடி காங்கிரஸ் சிறுபான்மை தலைவர் அம்பலம் ராவுத்தர் நெய்னார் கோரிக்கை விடுத்தார்..

# கல்லல் துளிர் இல்லங்களில் ஆற்றல் தின விழா





கல்லல், அக்.25-

சிவகங்கை மாவட்டம் கல்லல் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக துளிர் இல்லங்கள் என்ற அமைப்பானது மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டம் கல்லலில் சர் சி. வி ராமன், விக்ரம் சாராபாய், டாக்டர் முத்துலட்சுமி என்ற மூன்று துளிர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. துளிர் இல்ல உறுப்பினர்களாக பள்ளி மாணவ மாணவிகள் உள்ளனர். அவர்கள் அறிவியல் மனப்பான்மையையும், விழிப்புணர்வையும், அறிவியலின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் துளிர் இல்லங்கள் சார்பாக அறிவியல் சார்ந்த முக்கிய தினங்கள் கொண்டாடப்பட்டும் , அனுசரிக்கப்பட்டும் வருகிறது. அதன் ஒரு பகுதியாக அக்டோபர் 22 அன்று உலக ஆற்றல் தினம் கொண்டாடப்பட்டது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் கவிஞர் தமிழ்க்கனலின் அறிவியல் பாடலுடன் இந்த நிகழ்ச்சி துவங்கியது. சர் சி வி ராமன் துளிர் இல்லப் பொறுப்பாளர் நாகரத்தினம் வரவேற்புரை ஆற்றினார். உறுப்பினர் உதயகுமார் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டப் பொருளாளர் பிரபு ஆற்றல் மூலங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் அவற்றை சேமிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி மாணவர்களிடம் எடுத்துக் கூறினார். ஆற்றல் தொடர்பான அவரின் கேள்விகளுக்கு மாணவ மாணவிகள் பதிலளித்தனர். முத்துலட்சுமி துளிர் இல்ல பொறுப்பாளர் சித்திரைச் செல்வி நன்றியுரை ஆற்றினார்



# வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உயர்கல்விக்கு வழிகாட்டும் சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று சேர்க்கைக்கான ஆணை வழங்கினார்

வேலூர், அக்.25-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அடுக்கம்பாறை, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாக கூட்டரங்கில் நடைபெற்றஅரசு பள்ளிகளில் 8,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்து பல் வேறு காரண ங்களால் உயர் க்கல்வி பயில இயலாத மாணவ, மாணவிகளுக்காக, மருத்துவ துறை துணை படிப்புகளுக்கான உயர் கல்வி சேர்க்கை சிறப்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி, மாணவ, மாணவிகளுக்கு கல்லூரி சேர்க்கை க்கான ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.ரோகிணிதேவி, துணை முதல்வர் மரு.கௌரி வெளிகொண்டலா, மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) ரமேஷ், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161